Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ் ISO : 9001:2015; QT-57977/1125

DHINATH DHALAM Tamil & English daily Paper

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 67 · செவ்வாய்க்கிழமை Tuesday · 06.01.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode

**செய்தியாளர்கள் தேவை**




தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# 100 தொழிலாளர்களுக்கு மானிய விலையில் இஸ்கூட்டர் வழங்கும் திட்டம்

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைத்தார்



சென்னை

முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (5.1.2026) சென்னை, தீவுத்திடலில் நடைபெற்றநிகழ்ச்சியில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறைசார்பில்தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு மானிய விலையில் (e-scooter) இ-ஸ்கூட்டர்கள் வழங்கும் திட்டத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில்,

தமிழ்நாட்டில் உள்ள அமைப்புசாரா தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்திடவும், அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் நல உதவிகள் வழங்கிடவும், தமிழ்நாடு அரசால் 18 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் அமைக்கப்பட்டு சிறப்புடன் செயல்பட்டு வருகின்றன. இதன்மூலம் கல்வி, திருமணம், மகப்பேறு, இயற்கை மரணம், விபத்து மரணம், ஈமச்சடங்கு, விபத்து ஊனம், மாதந்திர ஓய்வூதியம் போன்ற நலதிட்டங்கள் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு நலவாரியம் மற்றும் இதர 18 நலவாரியங்களில் தற்போது 22,21,116 தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர். வாரியங்கள் துவங்கப்பட்டது முதல்இதுவரை 47,07,977 பயனாளிகளுக்கு 2,341 கோடி ரூபாய் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், இவ்வரசு பொறுப்பேற்ற நாள் முதல் 31.12.2025 வரையிலான காலங்களில் 7,57,104 அமைப்புசாரா தொழிலாளர்கள் புதியதாக பதிவு செய்துள்ளனர்.

இக்காலகட்டத்தில் 1,210கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் 12,26,530 தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும், 60 வயது பூர்த்தியடைந்த பதிவு பெற்ற 2,07,260 அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூ.1200/- வீதம் ஓய்வூதியம் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு அமைப்புசாரா ஓட்டுநர்கள் மற்றும் தானியங்கி மோட்டார் வாகனங்கள் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள 2,333 பெண் / திருநங்கை ஆட்டோ ஓட்டுநர்கள் புதியதாக ஆட்டோரிக்சா வாகனம்வாங்கும்செலவினத்தில் ரூபாய் ஒரு இலட்சம் வீதம் மானியமாக 23.33 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் இணைய சார்ந்த சேவை பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புசாரா கிக் தொழிலாளர்களின் (Gig Workers) நலனை பாதுகாக்கும் வகையில் அவர்களுக்கென தனியே நலவாரியம் அமைக்கப்படும் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 15.08.2023 அன்று சுதந்திர தின உரையில் அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்பிற்கிணங்க தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியம் (Tamil Nadu Platform based Gig Workers Welfare Board) 26.12.2023 அன்று தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியத்தில் தமிழ்நாடு முழுவதும் 23,687 இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் பதிவு செய்துள்ளனர்.

தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் ஓய்வு எடுக்கும் வகையிலும், கைபேசிக்கு மின்னூட்டம் (Charging) செய்வதற்கும், கழிப்பறை வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட ஓய்வுக்கூடங்கள் சென்னை மற்றும் கோயம்புத்தூர் போன்ற பெருநகரங்களில் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. மேலும், தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்களின் சமூக பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில் அவர்களுக்கு விபத்து மரணம் மற்றும் விபத்து ஊனத்திற்கு ரூ.5 இலட்சம் வரையிலான குழு காப்பீட்டுத் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்றுள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் 2,000 தொழிலாளர்களுக்கு புதிய இ-ஸ்கூட்டர் வாங்கும் செலவினத்தில் ரூ.20,000/- மானியமாக வழங்கும் புதிய திட்டம் 2025-2026 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கு 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு இணையம் சார்ந்த கிக் தொழிலாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற 100 தொழிலாளர்களுக்கு புதிய இ-ஸ்கூட்டர் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தினை முதல்-அமைச்சர் இன்றையதினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி. கணேசன், தலைமைச் செயலாளர் முருகானந்தம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை செயலாளர். வீர ராகவராவ்,தொழிலாளர் ஆணையர்ராமன்,தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் சமூக பாதுகாப்பு மற்றும் நல வாரிய செயலாளர் திவ்வியநாதன், தொழிலாளர் கூடுதல் ஆணையர் யாஸ்மின்பேகம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொகுதிப் பங்கீடு: மத்திய மந்திரி அமித்ஷாவுடன் எஸ்.பி. வேலுமணி 2ம் நாளாக ஆலோசனை



கூட்டணி விரிவாக்கம், தொகுதிப் பங்கீடு குறித்து அதிமுகவின் எஸ்.பி. வேலுமணியுடன் அமித் ஷா தொடர்ந்து 2-ம் நாளாக திருச்சியில் இன்று பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, இரண்டு நாள் பயணமாக நேற்று(ஜன.4) தமிழகம் வந்துள்ளார். திருச்சியில் பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரனின் பிரசார பயணத்தின் நிறைவு விழாவில் பங்கேற்றுப் பேசிய பின்னர் அதிமுக கூட்டணியில் தொகுதிப் பங்கீடு குறித்து எஸ்.பி.வேலுமணியுடன் நேற்று அமித் ஷா பேச்சுவார்த்தை நடத்தினர்.

தொடர்ந்து இன்று 2-ம் நாளாக திருச்சியில் அமித் ஷா தங்கியுள்ள தனியார் ஹோட்டலில் தொகுதிப் பங்கீடு குறித்து பேச்சுவார்த்தைநடைபெற்று வருகிறது.

அமித் ஷா, எஸ்.பி. வேலுமணி, தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளர் பியூஷ் கோயல் உள்ளிட்டோர் இந்த ஆலோசனையில் பங்கேற்றுள்ளனர்.

கூட்டணியில் இன்னும் சில கட்சிகளைச் சேர்ப்பது குறித்தும் ஆலோசனை நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஓபிஎஸ்,டிடிவி தினகரன், பாமக மற்றும் சில கட்சிகளைச் சேர்க்க பாஜக முனைப்பு காட்டி வருகிறது.

அதேபோல அதிமுக கூட்டணியில் பாஜகவுக்குஎத்தனைதொகுதிகள் வழங்கப்படும் என்பதும் பெரிய எதிர்பார்ப்பாக உள்ளது.

அமித் ஷா இன்று (திங்கள்) காலை திருச்சி ஸ்ரீரங்கம் கோயிலில் சாமி தரிசனம் செய்த பின்னர் மன்னார்புரத்தில் உள்ள ராணுவ மைதானத்தில் நடைபெறும் "நம்ம ஊரு மோடி பொங்கல்" விழாவில் கலந்துகொண்டார். தொடர்ந்து திருச்சி மன்னார்புரத்தில் உள்ள ராணுவ மைதானத்தில் "நம்ம ஊரு மோடி பொங்கல்" என்றபெயரில் மிக பிரமாண்ட அளவில்சிறப்புபொங்கல் விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி, இன்று காலை 1,008 பொங்கல் பானைகளுடன் பெண்கள் விழாவில் கலந்துகொண்டு பொங்கல் வைக்கின்றனர்.

மத்திய அமைச்சர் அமித் ஷா, இந்த பொங்கல் விழாவில் கலந்துகொண்டு விழாவைத் தொடங்கிவைத்து மக்களுக்கு பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

தமிழக பாஜக தேர்தல் பொறுப்பாளரான பியூஷ் கோயல், பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய இணையமைச்சர் எல். முருகன், முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டனர்.

# 10 ஆண்டுகால திமுக பயணத்துக்கு முடிவு; தவெகவில் இணைந்த காமராஜரின் வம்சாவளி பேத்தி



சென்னை: திமுகவில் 10 ஆண்டு காலமாக இருந்த, காமராஜரின் வம்சாவளி பேத்தி, நடிகர்விஜய்முன்னிலையில் தவெகவில் இணைந்துள்ளார்.

நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் திமுக, பாஜ உள்ளிட்ட மாற்றுக் கட்சிகளில் இருந்து விலகிய பலர் இன்று இணைத்துக் கொண்டனர். தவெக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த இணைப்பு விழாவை தொடர்ந்து புதிய கட்சி உறுப்பினர்களுடன் நடிகர் விஜய் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

தவெகவில் இணைந்தவர்களில் சிலர் குறிப்பிடத்தக்க அரசியல் பாரம்பரியமும், பின்னணியையும் கொண்டவர்களாகஉள்ளனர். அவர்களில் அனைவர் கண்ணிலும் பட்டவர்டி.எஸ்.கே.மயூரி கண்ணன். இவர் முன்னாள் முதல்வர் காமராஜரின் குடும்ப பின்னணியில்இருந்துவந்தவர். காமராஜரின் தம்பி அண்ணாமலை நாடாரின் பேத்தி.

தொடக்கத்தில் பாஜ.வில் இருந்த மயூரி, பின்னர்அக்கட்சியில்இருந்து விலகி திமுகவில் 2016ம் ஆண்டு ஏப்ரல் 2ம் தேதி, ஸ்டாலின் முன்னிலையில் திமுகவில் இணைந்தார். அவருடன், காமராஜரின் இளைய சகோதரி மகள் சந்திரா, கண்ணன், ராஜாமணி ஆகியோரும் திமுகவில் இணைந்தனர். இந்த இணைப்பை அப்போது திமுகஅதிகாரப்பூர்வமாக பெரியதாக வெளியிட்டு இருந்தது.

இந் நிலையில், திமுகவில் இருந்து விலகி,தற்போது தவெகவில் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டு இருக்கிறார் மயூரி. இணைவுக்கு பின்னர் அவர் சென்னையில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி;

இன்றைக்கு குடும்ப ஆட்சியை வேரோடு அறுக்கக்கூடிய இளைய தலைவராகமக்கள் அத்தனை பேரும் ஒரு மாற்றத்திற்கான தலைவராக இன்றைக்கு இருக்கக்கூடியதவெகதலைவரை சந்தித்து கட்சியில் இணைத்துக் கொண்டுள்ளேன். கோட்டையில் தவெக கொடி பறக்கும் என்பதே லட்சியம். வெற்றி நிச்சயம்.

திமுகவில் 10 ஆண்டுகாலமாக எந்த பொறுப்பும் இல்லாமல் நான் பயணித்துக் கொண்டு இருந்தேன். இன்றைக்கு இளைஞர்களின் விடிவெள்ளியாக இருக்கக்கூடிய ஒரு தலைவரை ஆதரிக்க வேண்டும் என்று தோன்றியது.

அதனால் நான் விஜய்க்கு ஆதரவு தெரிவித்துள்ளேன். பொறுப்பை எதிர்பார்த்து நான் தவெகவில் சேரவில்லை. நான் ஒரு 3 தேர்தல்களில் வேலை பார்த்துள்ளேன். விஜய் வெற்றிக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்வேன்.

இவ்வாறு மயூரி தமது பேட்டியின் போது கூறினார்.

இதே இணைப்பு விழாவில் தவெகவில் இணைத்துக் கொண்ட மற்றொரு நபர் வி.ஆர். ராஜ்மோகன்

. இவர் பிரபல எழுத்தாளர், நடிகர் வேல. ராமமூர்த்தியின் மகன் ஆவார். ஓபிஎஸ் ஆதரவாளரான அவர், அதிமுக மீட்புக் கழகத்தின் மாநில இளைஞரணி செயலாளராக இருந்தார். ஓபிஎஸ்சின் தீவிர விசுவாசியாக திகழ்ந்த அவர், பின்னர் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக அங்கிருந்து விலகினார்.

தம்மை தவெகவில் இணைத்துக் கொண்டு உள்ளார்.இவர்கள்தவிர தலித் எழில்மலையின் மூன்றாவது மகள் கேத்ரின் தவெகவில் இணைந்தார்.

**செய்திகள்**

**உடனுக்குடன் படிக்க**

**தினத்தளம்**

DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



தமிழக வெற்றிக் கழகம் திருப்பூர் கிழக்கு மாவட்டம் சார்பாக செயல் வீரர்கள் கூட்டம் தாராபுரம் சட்ட மன்ற தொகுதியில் நடைபெற்றது.. இதில் மாவட்ட அமைப்பு செயலாளர் திரு. செங்கோட்டையன் அவர்கள் வருகை தந்த நிலையில் தாராபுரம் வடக்கு நகரம் சார்பாக சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டு மாலை அணிவித்து, நினைவு பரிசாக வேல் அளிக்கப்பட்டது... இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் யுவராஜ் மகேஷ், மாவட்ட இணைச்செயலாளர் ஷேக் பரீத், நகர செயலாளர் MP ரமேஷ், நகர இணைச் செயலாளர் சாலி விக்டர், நகர பொருளாளர் பிரபு, துணை செயலாளர் மின்னல் சிலம்பரசன், துணை செயலாளர் உமா தேவி, நகர செயற்குழு உறுப்பினர்கள் ரஜினிகுமார்,ஜாபர், கார்த்திகேயன்,இதயகுமார்,தினகரன், மேகலா... மற்றும் வார்டு செயலாளர்கள் சங்கிலியம்மாள், ஆத்தி கண்ணன், மகேஸ்வரி மற்றும் தாராபுரம் வடக்கு நகர கிளை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்



# கன்னியாகுமரியில் கனிமொழி எம்.பி. பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது

திமுக துணைப் பொதுச்செயலாளர் கவிஞர் கனிமொழி எம்.பி. பிறந்தநாளை முன்னிட்டு கன்னியாகுமரியில் சுற்றுலாப் பயணிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

கன்னியாகுமரி அண்ணா சிலை முன் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கன்னியாகுமரி நகராட்சி தலைவர், நகர திமுக செயலாளர் குமரி ஸ்டீபன் தலைமை வகித்தார்.

இந்த நிகழ்ச்சியில் நகராட்சி கவுன்சிலர்கள் பூலோகராஜா, ஆட்லின், இக்பால், ராயப்பன், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் எஸ்.அன்பழகன், கழக நிர்வாகிகள் ஷ்யாம், நிர்வாகிகள் நாகராஜன், பி.ஆனந்த், ரூபின், பிரைட்டன், அருண், வேலு மற்றும் வழக்கறிஞர் டி. பாலகிருஷ்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

# கூடலூர் நகர திமுக கழகம் சார்பில் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாள் சாதனை விளக்க பொதுக்கூட்டம்

## திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேசினார்

கோவைவடக்குமாவட்டம் கூடலூர் நகர திமுக கழகம் சார்பில் உதயநிதி ஸ்டாலின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பெரியநாயக்கன்பாளையம் அருகே உள்ள கூடலூர் நகராட்சி சார்ஜர் மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்திற்கு நகராட்சி தலைவரும் நகரச் செயலாளருமான அறிவரசு தலைமை தாங்கினார். வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அந்தோணிராஜ் வரவேற்று பேசினார்.



சிறப்பு அழைப்பாளராக தலைமைக் கழக அமைப்புச் செயலாளர் வழக்கறிஞர் ஆர் எஸ் பாரதி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். அவர் பேசும்போது தமிழ்நாடு வந்துள்ள மத்திய அமைச்சர் அமித்ஷா 2019ஆம் ஆண்டு வந்தபோது பேசியதையே மீண்டும் பேசியுள்ளார். புதுக்கோட்டையில் அவர் பேசும்போது அடுத்த முதல்வர் உதயநிதி ஸ்டாலின் என்பதை அவர் வாயாலயே பேசி உறுதி செய்து விட்டார். உதயநிதி முதல்வர் ஆனால் தளபதி ஸ்டாலின் இந்தியாவின் பிரதமர் ஆவார். செந்தில் பாலாஜி பொறுப்பாளராக உள்ள கொங்கு மண்டலத்தில் பத்து தொகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெறும் என்று இன்றைய கருத்துக்கணிப்பு சொல்கிறது. மீதி உள்ள தொகுதிகளிலும் வெற்றி பெற்று நூற்றுக்கு நூறு சாதிப்போம். 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் இருநூறு தொகுதியில் அல்ல 220 தொகுதிகளுக்கு மேல் தி மு க தமிழ்நாட்டில் வெற்றி பெற்று தனி பெரும்பான்மை பெறும் என்று பேசினார்.

நிகழ்ச்சியில் வடக்கு மாவட்ட செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சி ஆர் ராமச்சந்திரன், அருண்குமார்,தலைமைசெயற்குழு உறுப்பினர் டி ஆர் சண்முகசுந்தரம், சட்டத்துறை இணைச் செயலாளர் சூர்யாவெற்றிகொண்டான்,ஒன்றிய செயலாளர் எஸ் எம் டி கல்யாணசுந்தரம், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் ஜெயக்குமார், நகர செயலாளர்கள் முனுசாமி, அசரப் அலி, முகமது யூனுஸ், அவைத்தலைவர் பிரபு, பொருளாளர் சந்திரசேகர், மாவட்ட பிரதிநிதிகள் கிருபாகரன், நகர இளைஞரணி அமைப்பாளர் உதயகுமார், துணை அமைப்பாளர்கள் சிவசுப்பிரமணியம்,குணசேகரன், பாலசுப்ரமணியம், உதயகுமார், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முனுசாமி, தலைமைக் கழக பேச்சாளர்கள் திருப்பூர் கூத்தரசன், உடுமலை தண்டபாணி, வீரபாண்டி பேரூராட்சி தலைவர் பத்மாவதி, பேரூர் கழகச் செயலாளர் சுரேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். முடிவில் பொதுக்குழு உறுப்பினர் முருகானந்தம் நன்றி கூறினார். நிகழ்ச்சியில் அரசு பள்ளியில் படிக்கும் இரண்டாம் வகுப்பு மாணவி தமிழ் என்பவர் தி மு க ஆட்சி பற்றியும் தமிழ் வளர்ச்சி பற்றியும் பேசினார். அவருக்கு அமைப்புச் செயலாளர் பாரதி பாராட்டு தெரிவித்து பரிசு வழங்கினார்.

# விருந்தீஸ்வரர் திருக்கோவில் ஆருத்ரா தரிசனம்

# நடராஜருக்கு மஹா அபிசேகம், சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் திருவீதி உலா மற்றும் அன்னதானம்





கோவை துடியலூர் அடுத்துள்ள வடமதுரையில் 300 வருடங்களுக்கு மேல் பழமையான அருள்மிகு விருந்தீஸ்வரர் திருக்கோவிலில் மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரம் ஆருத்ர தரிசனம் வெகு விமர்சையாக நடைபெற்றது. இதில் நடராஜருக்கு மஹா அபிசேகமும், சுவாமிக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது.தொடர்ந்து திருவீதி உலா மற்றும் அன்னதானம் நடைபெற்றது.

மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை நட்சத்திர நாளில் சிவபெருமானை நடராஜராக தரிசிக்கும் மிகப் புனிதமான திருநாளாகும். மார்கழி மாதத்தில் வரும் பௌர்ணமியும், திருவாதிரை நட்சத்திரமும் இணையும் நாளன்று ஆருத்ரா தரிசனம் மிகக் கோலாகலமாகத் கொண்டாடப்படுகிறது.

அதேபோல் கோவை துடியலூர் அடுத்துள்ள வடமதுரையில் 300 வருடங்களுக்கு மேல் பழமையான அருள்மிகு விருந்தீஸ்வரர் திருக்கோவிலில் மார்கழி மாத திருவாதிரை நட்சத்திரம் ஆருத்ர தரிசனம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

அதிகாலை 4 மணியளவில் நடை திறக்கப்பட்டு, ஆடல்வல்லான் நடராஜப் பெருமானுக்கும் சிவகாமி அம்பாளுக்கும் பால்,தயிர்,தேன்,இளநீர், சந்தனம் மற்றும் பன்னீர் உள்ளிட்ட திரவியங்களால் சிறப்பு மகா அபிஷேகம் நடைபெற்றது.

இதில் தயாநிதி குருக்கள் தலைமையில் சிவனடியார்கள் இறைவனுக்கு அபிசேக, அலங்கார பூஜைகளை செய்தனர். இதில் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பொங்கள்,சுண்டல்,தயிர்சாதம் உள்ளிட்ட பிரசாதங்கள் அன்னதானமாக வழங்கப்பட்டது.

இவ்விழா அருள்மிகு விருந்தீஸ்வரர் கோவில் அறங்காவலர் குழு தலைவர் பி வி மணி தலைமையில் நடைபெற்றது. இதில் அறங்காவலர் குழு உறுப்பினர்கள் அம்சவேணி பழனிச்சாமி, சாமிநாதன், குருடம்பாளையம் ஊராட்சி முன்னாள் தலைவர் டி ரவி ஆகியோர் முன்னிலைவகித்தனர்.

விழாவிற்கான ஏற்பாடுகளை வேல் முருகன், சேகர், கோவில் பிரதோஷ குழுவினர்,செல்வகுமார், ரவிச்சந்திரன், தமிழ் செல்வன், மோகனசுந்தரம், விஜயகுமார், தம்பி,பாபு,விபின்,அபிச்சந்திரன், ஜெயபால், காளிதாஸ், அருணாச்சலம், கண்ணன், சுரேஷ், ஆர் விஜயன், ஜோதிமணி, கலா, ஜெயக்கொடி, பேபி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

# மதுரை திருப்பரங்குன்றம் பாம்பன் நகரில் நியாய விலை கடையை மாணிக்கம் தாகூர் எம்.பி. திறந்து வைத்தார்



மத்திய உள்துறை அமைச்சர்அமித்ஷாதமிழிசை அக்காவை அவமானப்படுத்தியுள்ளார். புதுக்கோட்டையில் அமித்ஷா அனைவரின் பெயரையும் சொல்லிவிட்டு, தமிழிசை சௌந்தர்ராஜன்பெயரைசொல்லவில்லை. ஆர்எஸ்எஸ் பெண்களுக்கு எதிரான கட்சி, rss-ன் எண்ணம் பெண்களை அவமானப்படுத்துவது தான். இதில் அமித்ஷாவின் பெண்கள் எதிர்ப்பு மனநிலை அதில் தெரிகிறது. உள்துறை அமைச்சர் அமைச்சர் அமித்ஷா பெண்களை தொடர்ந்து அவமானப்படுத்தி வருகிறார். இதற்கு அமித்ஷாமன்னிப்புகேட்க வேண்டும்.தாமரை மலர்ந்தே தீரும் என ஊர் ஊராக சொன்ன அக்கா தமிழிசை சௌந்தர்ராஜனை அமித்ஷா அவமானப்படுத்தியிருக்கிறார்.

. கூட்டணியின் வாக்குகள் அதிகமாக உள்ளது. லயோலா கல்லூரி கருத்துக்கணிப்பின் படி விஜய் மூன்றாவது இடத்திற்கு வருவார். TVK மூன்றாவது இடத்திற்கு வரும். எடப்பாடி பழனிசாமி இரண்டாவது இடத்திலும் வர முடியாது மூன்றாவது இடத்திலும் வர முடியாது. அதிமுக கூட்டணி படு பாதாளத்தில் காலத்தில் இருக்கிறது. அண்ணன் எல் முருகன் தமிழகத்திற்கு ஒன்றும் செய்யவில்லை. மதுரை விமான நிலையத்திற்கு ஒன்றும் செய்யவில்லை, மெட்ரோவை நிறுத்தும் போது அமைதியாக இருக்கிறார் .திருப்பரங்குன்றத்தில் மதவெறியை தூண்ட வேண்டும் பிரச்சினையை கலப்ப வேண்டும் என்றால் வேலோடு அமைச்சர் எல்.முருகன் வந்துவிடுகிறார்.

மக்களைப் பொருத்தமட்டில் இந்தியாகூட்டணி வெற்றி பெறும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மக்களின் உண்மையான பிரச்சினைகளுக்கு பதில் கொடுக்கக்கூடிய கூட்டணியாக மக்களின் பிரச்சனைகளில் பங்கு பெறக்கூடிய கூட்டணியாக இந்தியா கூட்டணி உள்ளது.

கல்வித்துறைக்கு பணத்தை கொடுக்காமல் பாஜகஅரசு அதிகாரதுஷ்பிரயோகம் செய்கிறது. மக்களுடைய பிரச்சனைகளை இந்தியா கூட்டணி தெளிவாக கையாளுகிறது. முதல்வர் மு க ஸ்டாலின் சிறந்த ஆட்சியை கொடுத்து வருகிறார். கனிமொழிக்கு வாழ்த்து சொல்லியது குறித்த கேள்விக்கு,

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் அமித்ஷாவும் மோடியும் வாழ்த்துதெரிவிப்பார்கள். எனக்கும் வருகிற பிறந்தநாள் அன்று வாழ்த்து தெரிவிப்பார்.



ஈரோடு மாநகர் பெரியார் நகர் 80 அடி சாலையில் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மகளிர் அணிக்கு கோலப்போட்டி நடைபெற்றது. இந்நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார்,மாவட்ட துணைச் செயலாளர் செந்தில்குமார். மாநகரச் செயலாளர் சுப்பிரமணி. மாவட்ட பொருளாளர் பி.கே. பழனிசாமி, மகளிர் அணியின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு சிறந்த கோலங்களை தேர்வு செய்தனர்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | |

தொடர்புக்கு : ☎ +919444082959

# கோவையில் 5000 ஆண்டுகளுக்கு முந்தைய கற்குழிகள், கருவிகள் கண்டுபிடிப்பு





கோவைபெரியநாயக்கன்பாளையம்அருகேஉள்ள பாலமலை உச்சியில் 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய பெருங்கற்காலத்திற்கு முற்பட்ட கோப்பை வடிவக் கற்குழிகள், கருவிகள் மற்றும் ஆயுதங்களை கூர் தீட்டும் கற்குழிகளை தொல்லியியல் ஆய்வாளர் முனைவர் ராஜேந்திரன் கண்டுபிடித்துள்ளதாகவும் அதனை தமிழ்நாடு அரசு தொல்லியல்துறையின் ஆய்வு மேற்கொண்டு ஆவணப்படுத்தி பாதுகாக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்தஒருசெய்தித்தொகுப்பைதற்போதுபார்க்கலாம்.

கோவை பி எஸ் ஜி கலை அறிவியல் கல்லூரியில் தமிழ் துறை உதவிப் பேராசிரியராக பணியாற்றி வருபவர் முனைவர் ராஜேந்திரன். தொல்லியல் துறையின் மீது கொண்ட ஈடுபாட்டின் காரணமாக அது குறித்து படித்து கடந்த 13 ஆண்டுகளாக தொல்லியல் ஆய்வு பணிகளில் ஈடுபட்டு வருகிறார். இதில் சிவகங்கை மாவட்டத்தில் 8 இடங்களில் பழங்கால தொல்லியல் கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்து பதிவு செய்துள்ளார்.

இங்கு 250 ஆண்டுகள் பழமையான பாலமலை அரங்கநாதர் ஆலயம் அருகே பெருங்கற்காலத்திற்கு முற்பட்ட கோப்பை வடிவக் கற்குழிகள், கருவிகள் மற்றும் ஆயுங்களை கூர் தீட்டும் கற்குழிகளை கண்டுபிடித்துள்ளார்.

இது குறித்து ராஜேந்திரன் கூறும்போது கோவை புறநகர் பகுதியில் பெரியநாயக்கன்பாளையம், புதூர், காளப்பட்டி, பெருங்குடி, சின்னங்காவு, ரோமாநிய குன்றுகள்,தீர்த்தக்கோடு போன்றபகுதிகளில் இதற்கு முன்பே பல்வேறு தொல்லியல் சான்றுகள் கண்டறியப்பட்டுள்ளதாகவும்.

இந்த கற்குழிகளுக்கு அருகே மூன்று அடி உயரமும் 7 அடி நீளமும் கொண்ட சாம்பல் நிறப் பாறையில் கல்லாயுதங்களைகூர்மைப்படுத்தபயன்படுத்தப்பட்ட 12 தேய்ப்பு குழிகள் கண்டறிந்துள்ளதாகவும், இச்சான்று புதிய கற்கால கருவிகளை பயன்படுத்திய மக்கள் பாலமலையில் வாழ்ந்திருக்கலாம் என்பதை உறுதிப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

புதிய கற்கால தரவுகள் கொங்கு மண்டலத்தில் ஒரு சில இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருந்தாலும், கோப்பை வடிவ கற்குழி இதுவரை கண்டுபிடிக்கப்பட்டதற்கான பதிவுகள் இல்லை. இத்தகைய தொல்பழங்கால சான்றுகளை தன்னகத்தை கொண்டுள்ள பாலமலையின் கீழே கோவனூர் மலையில் 4000 ஆண்டுகளுக்கு பழமையான பாறை ஓவியங்கள் உள்ளன. இதனை தொல்லியல் துறையினர் ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்து ஆவணப்படுத்தியுள்ளனர். எனவே இந்த தரவுகள்பாலமலைசுற்றுவட்டாரபகுதியில்வரலாற்று காலத்திற்கு முன்பு இருந்தே தொல்பழங்கால மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு சான்றுகளாக அமைகின்றன. ஆகவே இதுகுறித்து மேலும் ஆய்வு மேற்கொள்ள ப்பட வேண்டிய அவசியம் இருப்பதாக வும்,புதிதாககண்டறியப்பட்ட இக்கற்குழிகள் கோவை வட்டாரத்தின் தொல்லியல் வரலாற்றில் முக்கிய இடம் பெறும் எனவே தமிழ்நாடு தொல்லியல் துறை இவ்விடங்களை முழுமையாக ஆய்வு செய்து ஆவணப்படுத்தி பாதுக்காக்க வேண்டும் என தொல்லியல் ஆய்வாளர் முனைவர் ராஜேந்திரன் கோரிக்கை எடுத்துள்ளார்.



திமுக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, தனது பிறந்தநாளையொட்டி, சென்னை கோபாலபுரம் இல்லத்தில் திமுக தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான கலைஞர் கருணாநிதியின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# கோவை சித்ரா பகுதியில் உள்ள அரவிந்த் கண் மருத்துவமனையில் ஸ்பான்சர்கள் தினம் கொண்டாடபட்டது

## தமிழகம் மட்டுமின்றி கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து ஸ்பான்சர்கள் கலந்து கொண்டனர்






கோவை சித்ரா பகுதியில் அரவிந்த் கண் மருத்துவமனை செயல்பட்டு வருகின்றது. இம்மருத்துவமனை சார்பாக பல்வேறு பகுதிகளில், பொதுமக்களுக்கு கண்கள் பற்றிய முழுவிழிப்புணர்வு ஏற்படுத்துவதுடன், இலவச சிகிச்சைகள், பரிசோதனைகளும் நடத்த பட்டு வருகிறது. அதற்கு உறுதுணையாக செயல்பட்டு வருகின்ற ஸ்பான்சர்களின்சேவைகளைபாராட்டும் வகையில் இம்மருத்துவமனை சார்பாக, மருத்துமனை வளாகத்தில் விழா நடத்தி அனைவரையும் பாராட்டினர். இதில் கலந்து கொள்ள தமிழகத்தின் பல்வேறு பகுதிகள் உட்பட கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கு அரவிந்த் கண் மருத்துவமனையின் தலைமை மருத்துவ அதிகாரி டாக்டர் நரேந்திரன் வரவேற்புரையாற்றினார். தொடர்ந்து கண்புறை ஏற்படுவதால் உருவாகும் பாதிப்புகள் குறித்து கண்புரை அறுவை சிகிச்சை மருத்துவர் பாலசரஸ்வதி சிறப்புரையாற்றினார். தொடர்ந்துநீரிழிவுவிழித்திரை தொடர்பாக ரெடினா மருத்துவ ஆலோசகர் டாக்டர் சரவணன் சிறப்புரையாற்றினார். கண்களில் ஏற்படும் காயங்கள் குறித்தும் அதற்க்கு உண்டான தீர்வுகள் குறித்தும், டாக்டர் விஜி ரங்கராஜன் சிறப்புரையாற்றினார். இதே போல கண் வங்கி குறித்தம் அதன் செயல்பாடுகள் குறித்தும் கார்னியா தலைவர் மருத்துவர் மங்களா, மயோபியா தொற்று நோய் குறித்து குழந்தைகள் கண் மருத்துவர் சசிகலா சிறப்புரையாற்றினார். தொடர்ந்து அரவிந்த் கண் மருத்துவமனை கடந்து வந்த பாதைகள் குறித்தும், அதற்க்கு உறுதுணையாக இருந்த ஸ்பான்சர்கள் அனைருக்கும் விழா மேடையில் வாழ்த்துக்கள் தெரிவிக்கபட்டது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை அமைப்பின் நிறுவன தலைவரும், சமூக ஆர்வலரும், வழக்கறிஞருமான புஷ்பானந்தம் கலந்து கொண்டு தனது அனுபவங்களை பகிர்ந்து கொண்டார். அப்பொழுது அவர் கூறியதாவது..

அரவிந்த் கண் மருத்துவமனை சார்பாக இதுவரை 19 முகாம் களை வெற்றி கரமாக நடத்தி அதில் ஆயிரக்கணக்கான பொதுமக்களுக்கு அறுவை சிகிச்சைகள் அளிக்கக் பட்டு தற்பொழுது வரை நீண்ட ஆயுளுடன், கண்பார்வை குறைபாடுகள் இல்லாமல் இருந்து வருகின்றனர். அதற்க்கு உறுதுணையாகவும், ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகவும் அறுவை சிகிச்சைகள், மருந்து மாத்திரைகள், வழங்கும் மருத்துவமனையின் செயல் பாராட்டுக்குறியது அதற்கு தனது வாழ்த்துக்கள் என்று தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில்

வழக்கறிஞர் குமாஸ்தாக்கள் ஜான், பால் ராஜ், அரவிந்த் மருத்துவமனை மக்கள் தொடர்பு அதிகாரி முத்து சாமி, மருத்துவர்கள் கணேஷ்ராமசந்திரன், ரோட்னிஜேமோரிஸ், சந்திரசேகர், மற்றும் விஜயராணி, வனிதா, தேவி, திவ்யாஎனபலரும்கலந்து கொண்டனர்.

# அச்சிறுபாக்கம் வட்டாரத்தில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைப்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் அடுத்த அச்சிறுபாக்கம் வட்டாரத்தில்கட்டிமுடிக்கப்பட்ட கட்டடங்கள் பயன்பாட்டிற்குஒப்படைக்கப்பட்டது.

அச்சிறுபாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு உட்பட்ட 59 ஊராட்சிகள் உள்ளது. இதில், கடமலைப்புத்தூர், ஒரத்தி, சென்னேரி, அனந்தமங்கலம், முருங்கை, சிறுதாமூர் உள்ளிட்ட பகுதிகளில், இரண்டு கோடி ரூபாய் மதிப்பில், கட்டி முடிக்கப்பட்ட அங்கன்வாடி மைய கட்டடம், பள்ளி மதில் சுவர், பால் கொள்முதல் நிலையம், உலர் களம், நியாய விலை கடை உள்ளிட்ட கட்டடங்கள் கட்டப்பட்டது.

இதன் திறப்பு விழா நேற்று, சிறுதாமூர் ஊராட்சி மன்ற தலைவர் சரசு செல்லப்பன், உத்திரமேரூர் தி.மு.க. எம்.எல்.ஏ., சுந்தர் தலைமையில், காஞ்சிபுரம் எம்.பி., செல்வம் முன்னிலையில், ஒன்றிய குழு பெருந்தலைவர் கண்ணன் ஆகியோர், திறந்து பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்பட்டது.

இந்நிகழ்வில், ஊராட்சி மன்ற தலைவர்கள், ஊராட்சி செயலர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

சிறுதாமூர் ஊராட்சியில் கட்டப்பட்ட அங்கன்வாடி மைய கட்டடத்தை, ஊராட்சி மன்ற தலைவர் சரசு செல்லப்பன், உத்திரமேரூர் தி.மு.க., எம்.எல்.ஏ., சுந்தர், காஞ்சிபுரம் எம்.பி., செல்வம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் பங்கேற்று திறந்து வைத்தனர்.





# இலத்தூரில் தமிழக வெற்றிக் கழகம் செங்கோட்டை கிழக்கு ஒன்றிய அலுவலகம் திறப்பு விழா; நியாஸ் பங்கேற்பு

தென்காசி மாவட்டம் தமிழக வெற்றி கழகத்தின் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட செங்கோட்டை கிழக்கு ஒன்றிய அலுவலகம் திறப்புவிழா இலத்தூரில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தென்காசி மேற்கு மாவட்ட கழக செயலாளர் N. நியாஸ் NJSR செங்கோட்டை கிழக்கு ஒன்றிய அலுவலகத்தினை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். பின்னர் குத்து விளக்கு ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார். தொடர்ந்து விழாவில் கலந்துகொண்டமாவட்ட செயலாளருக்கு ஒன்றிய கழக செயலாளர் ட. பரமசிவன் பொன்னாடை அணிவித்து நினைவு பரிசு வழங்கினார்.

இந்தவிழாவில்தமிழக வெற்றி கழகத்தின் மாவட்ட இணைச் செயலாளர் முத்தையா, துணை செயலாளர் மாரிமுத்து, மாவட்ட கழக பொருளாளர் VTA சிவசங்கர், மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர் வாசுதேவி, தொண்டர் அணி அமைப்பாளர் காந்தி, மாவட்ட நிர்வாகி எஸ். வேல்துரை, மாவட்ட நிர்வாகி மணவாளன், செங்கோட்டை ஒன்றிய இணைச் செயலாளர் SHARPராஜா, நகர நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், மாவட்ட இளைஞரணி நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், கிளைக் கழக நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர். முன்னதாகநான்குமுக்கு ரோடு சந்திப்பில் இருந்து நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்த மேற்கு மாவட்ட செயலாளர் நியாஸ்க்கு கிழக்கு ஒன்றிய செயலாளர் ட. பரமசிவன் தலைமையில் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் மேள தாள முழங்க பட்டாசு வெடித்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.விழாவின் நிறைவில் பங்கேற்ற அனைத்து கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு சிறப்பான மதிய விருந்து வழங்கப்பட்டது.

# ஜனநாயகன் திரைப்படம் வெற்றி விழா காண ஆட்சீஸ்வரர் திருக்கோயிலில் சிறப்பு பூஜை



செங்கல்பட்டு மாவட்டம் தவெக தலைவர் விஜய் நடிப்பில் வெளிவர இருக்கும் ஜனநாயகம் திரைப்படம் 100 நாள் வெற்றி விழா காண அச்சிறுப்பாக்கம்ஆட்சீஸ்வரர் திருக்கோவிலில் சிறப்பு பூஜை அன்னதானம் வழங்கப்பட்டது.

தவெக தலைவர் விஜய்நடிப்பில்வெளிவர இருக்கும் ஜனநாயகன் திரைப்படம் 100 நாள் வெற்றி விழா காண தமிழகம் முழுவதும் உள்ள அவரது ரசிகர்கள் பிரசித்தி பெற்ற கோவில்களில் சிறப்பு பூஜை அபிஷேகம் அலங்காரம் ஆராதனைகள் செய்யப்பட்டு வருகின்றனர்.

அதன் ஒருபகுதியாக தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் ஆலோசனைப்படி செங்கல்பட்டு மாவட்டம் புகழ்பெற்ற அச்சிறுப்பாக்கம்ஆட்சீஸ்வரர் திருக்கோவிலில் அதிகாலை சிறப்பு அபிஷேகம் அலங்காரம் ஆராதனைகள் நடைபெற்று பக்தர்களுக்கு இனிப்புடன் கூடிய அன்னதானம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகிகள் எம்.எஸ்.பாலாஜி, சபரி, சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டனர்.இதில் ஒன்றிய நிர்வாகிகள் தரணிதரன், ஜானகிராமன், செந்தில், இளங்கோவன், மற்றும் நகர நிர்வாகிகள் கராத்தே கரண், ஏழுமலை, ஜெகன், சக்திவேல், உள்ளிட்ட மகளிர் அணியினர் பலர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை அச்சிறுப்பாக்கம் ஒன்றிய நகர நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் .ஆர்.அழகுமீனா, மேலகிருஷ்ணன்புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க நியாயவிலை கடைக்குட்பட்ட பகுதி குடும்ப அட்டைத்தாரர்களுக்கு பொங்கல் பரிசுத்தொகுப்புக்கான டோக்கன்கள் வீடுகள் தோறும் வழங்கி வருவதை வழங்கி, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சிவகாமி உட்பட பலர் உள்ளார்கள்.



தென்காசி மாவட்டம் புளியங்குடி நகர் மன்ற தலைவர் விஜயா சௌந்தர பாண்டியன் அவர்கள் கழகத் துணைப் பொதுச் செயலாளர் மற்றும் தென் மண்டல பொறுப்பாளருமானதூத்துக்குடிநாடாளுமன்றஉறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்களின் பிறந்தநாளையொட்டி நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்தார்

# தூத்துக்குடியில் தமிழ்நாடு எச்எம்எஸ் உழைப்பாளர் சங்கம் சார்பில்

# அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு ரூ.7 ஆயிரம் பொங்கல் போனஸ் வழங்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்




தமிழக முழுவதும் நலவாரியத்தில் பதிவு செய்துள்ள கட்டுமான அமைப்புசாரா தொழிலாளர் அனைவருக்கும் பொங்கல் பண்டிகை முன்னிட்டு ரூ.7000 போனஸ் வழங்க வேண்டும், 60 வயது பூர்த்தி ஆனவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும், தொழிலாளர்களின் உரிமையை பறிக்கின்ற நான்கு புதிய சட்டங்களையும் உடனடியாக ரத்து செய்ய கோரி தூத்துக்குடியில் எச்எம்எஸ் உழைப்பாளர் சங்கம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் சிதம்பரம் நகர் பஸ் நிலையம் அருகே நடந்தது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் ராஜ்குமார் தலைமைதாங்கினார்.மாநிலசெயலாளர்ராஜலட்சுமி முன்னிலை வகித்தார். மாநில துணைத்தலைவரும் தூத்துக்குடி துறைமுக சபை உறுப்பினருமான துறைமுகம் சத்யா, தூத்துக்குடி போர்ட் யுனைடெட் ஜென்ரல் ஒர்க்கஸ் யூனியன் பொதுச் செயலாளர் ஜான் கென்னடி,தமிழ்நாடு மின்வாரிய தொழிலாளர் பொறியாளர்கள் ஐக்கிய சங்கம் வட்டத் தலைவர் வினோத் தெற்கு ரயில்வே மஸ்தூர் யூனியன் கிளை பொறுப்பாளர் காந்தி சேகர், நெல்லை மாவட்ட தலைவர் ஷாஜகான், தூத்துக்குடி மாவட்ட துணை தலைவர்ராதா,வட்டச்செயலாளர்சேர்மராஜ்,வட்டத் தலைவர் அழகுவிஜி, சட்ட ஆலோசகர் மாவட்ட இணைசெயலாளர்மணிகண்டராஜா,ஜாகிர் உசேன், தொகுதி செயலாளர்கள் மணிகண்டன், ராஜேஷ், இசக்கிமுத்து ஜெயக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# நந்தா கல்வியியல் கல்லூரியில் தொழில் முனைவோருக்கான சிறப்பு விழிப்புணர்வு முகாம்



நந்தா கல்வியில் கல்லூரியில் தொழில் முனைவோருக்கான மத்திய மற்றும் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் இனிதே நடைபெற்றது. இம்முகாமினை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் எஸ். பானுமதி சண்முகன் அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இம்முகாமில் தமிழக அரசு தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் மாவட்ட நிரல் மேலாளர் முனைவர் எம். சசிகுமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

மேலும், ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் செயலர் எஸ். நந்தகுமார் பிரதீப், நந்தா கல்வி நிறுவனங்களின்செயலர்எஸ்.திருமூர்த்திஆகியோர் கலந்து கொண்டு முகாமினை சிறப்பித்தார்கள். முன்னதாக, இந்நிகழ்ச்சியில் கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். பத்மா அவர்கள் வரவேற்புரை நல்கினார். மாவட்ட நிரல் மேலாளர் முனைவர் எம். சசிகுமார் அவர்கள் மாணவர்களுடன் கலந்துரையாடினார். அப்போது கூறுகையில், சிறு மற்றும் குறு நிறுவனங்கள் நடுத்தர நிறுவனங்கள் கடன் மற்றும் நிதி உதவி வழங்க மத்திய மற்றும் மாநிலஅரசால்மேற்கொள்ளும்திட்டங்கள்,தொழில் முனைவோர் பயிற்சிகள் மற்றும் செயல்பாடுகள் பற்றி எடுத்துரைத்தார். அவற்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது பற்றி மாணவ, மாணவிகளுக்கு விளக்கி தொழில் முனைவோர் மற்றும்சுயதொழில்செய்பவர்களுக்குவழங்கப்படும் கடன் மற்றும் நிதி உதவிகள் பற்றியும் விளக்கிப் பேசினார். இதில் மாணவ, மாணவிகள் வருங்கால தொழில் முனைவோராக உருவாவதற்கு இம்முகாம் மிகவும் பயனுள்ளதாக இருந்தது என தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்கள் என்பது குறிபபிடத்தக்கது.

நிகழ்வின் இறுதியில் நந்தா கல்வியியல் கல்லூரியின் உயிர் அறிவியல் துறை துணைப் பேராசிரியர் முனைவர் ஜெயக்குமார் அவர்கள் நன்றியுரையாற்றினார்.

# மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முகூர்த்த கால் நடும் விழா அமைச்சர் மூர்த்தி பங்கேற்பு



மதுரை அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முகூர்த்தகால் நடும் விழா அவனியாபுரம் வாடிவாசல் அமையும் இடத்திற்கு முன்பு நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தலைமையேற்று பந்தக்கால் நட்டப்பட்டு அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டிக்கான முன்னேற்பாடுபணிகளை தொடக்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்து அவர் கூறுகையில்: தமிழர் உடைய பாரம்பரியமான வீரவிளையாட்டான ஜல்லிக்கட்டு அலங்காநல்லூர்பாலமேடு அவனியாபுரம் ஜல்லிக்கட்டை எப்போதும் இல்லாத அளவிற்கு சிறப்பாக ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் மாநகராட்சி நிர்வாகம் காவல்துறை முன்கூட்டியே வேலைகளை ஆரம்பித்துள்ளனர். ஜல்லிக்கட்டுக்கு முதலமைச்சர் துணை முதலமைச்சர் வருகிறார்கள் நீங்கள் எதிர்பார்க்கும் அளவிற்கு இந்த முறை சிறப்பாக அமையும்.

ஜல்லிக்கட்டு போட்டியில் உயிரிழந்தவர்களுக்கு கூடுதல் நிதியும் அரசு வேலையும் என்ற கோரிக்கை நீண்ட நாளாக உள்ளது கொடுத்த கேள்விக்கு: அமைச்சர் மூர்த்தி பதிலளிக்கையில் ஆன்லைன் பதிவு முறையாக நடக்கும் அதில் ஒன்றும் பிரச்சனை இல்லை முதல் பரிசு வழக்கம்போல கார்டிராக்டர்மூன்று ஜல்லிக்கட்டுளும் வழங்கப்படும் அதில் பாகுபாடு எதுவும் இருக்காது என்றார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (05.01.2026) மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அரசு வாகன ஓட்டுநர் சங்கத்தின் சார்பில் மருத்துவ முகாமினை திறந்து வைத்து, பார்வையிட்டார்.

# ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்



ஈரோடு மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் நேற்று (05.01.2026) மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, விதவை உதவித்தொகை, கருணை அடிப்படையில் வேலை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை, இலவச வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல், விலையில்லா தையல் இயந்திரம், ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் என மொத்தம் 202 மனுக்கள் வரப்பெற்றனபல்வேறுகோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

நேற்றைய தினம், மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தொழிலாளர் நலத்துறையின் சார்பில், 2 நபர்களுக்கு தலா ரூ.4,00,000/- வீதம் ரூ.8,00,000/-மதிப்பீட்டில் பதிவு பெற்ற கட்டுமானத் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதித்திட்டத்தின் கீழ் சொந்தமாக நிலம் வைத்துள்ள தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக்கொள்ள நிதியுதவி வழங்குவதற்கான ஆணையும், 17 நபர்களுக்கு தலா ரூ.1,90,000/-வீதம் ரூ.32,30,000/-மதிப்பீட்டில் தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தின் பதிவு பெற்ற நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகளில் வீடு ஒதுக்கீட்டு ஆணைகளையும் வழங்கினார். இக்கூட்டத்தில், தொழிலாளர் உதவி ஆணையர் முருகேசன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) செல்வராஜ், உட்பட அனைத்துத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாவட்டத்தில் மாவட்ட முதன்மை நீதிபதி எஸ்.சமீனா, கலெக்டர் ச. கந்தசாமி ஆகியோர் இளைஞர் நீதிக் குழும அலுவலக கட்டிடத்தினை திறந்து வைத்தார்கள்



இளைஞர் நீதிச்சட்டம் 2015 மற்றும் அதன் விதிகள் செயல்படுத்துவதன் மூலம் 18 வயதிற்குட்பட்டசட்டத்திற்குமுரண்பட்ட குழந்தைகளை விசாரித்து, பாதுகாப்பு அளித்து, சீர்திருத்தி, மறுவாழ்வு அளிப்பதே இக்குழுமத்தின் நோக்கமாகும். குழந்தைகளின் நலனை முன் நிறுத்தி சட்ட உதவி, ஆலோசனை, சமூக ஒருங்கிணைப்பு போன்றவற்றை உறுதி செய்து இளைஞர் நீதிக் குழுமம் செயல்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்ட இளைஞர் நீதிக் குழும அலுவலகம் வாடகை கட்டிடத்தில்செயல்பட்டு வந்த நிலையில் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இளைஞர் நீதிக்குழுமம் செயல்பட ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டிடத்தை இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில்மாவட்ட காவல் கண்காணிப்பாளர்அ.சுஜாதாதலைமை நீதித்துறை நடுவர் கே.கிருஷ்ணபிரியா, இளைஞர் நீதிக்குழும முதன்மை நடுவர் ஆர். வாஞ்சிநாதன். மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ரா.உமாமகேஸ்வரி, மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள், நீதிமன்ற நடுவர்கள் உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி பிறந்தநாளை முன்னிட்டு அவரது சிஜடி காலனி இல்லத்தில் தூத்துக்குடி வடக்கு மாவட்டசெயலாளர் சமூக நலம் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் நேரில்சந்தித்து சால்வை அணிவித்துவாழ்த்து தெரிவித்தார். தூத்துக்குடி கலை இலக்கிய அணி செயலாளர் ஜீவன் ஜேக்கப் உடனிருந்தார்.

# தூத்துக்குடியில் திமுக மகளிர் அணி சார்பில் கனிமொழி எம்.பி. பிறந்தநாள் விழா



தூத்துக்குடியில் வடக்கு மாவட்ட மகளிர் அணி திமுக சார்பில் மாநில துணை பொது செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி பிறந்தநாள் விழாபழைய பேருந்து நிலையம் முன்பு நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட மகளிரணி அமைப்பாளர் கவிதா தலைமை தாங்கினார் மாநகர செயலாளர் செயலாளர் எஸ் ஆர் ஆனந்த சேகரன் முன்னிலை வைத்தார். மேயர் ஜெகன் பெரியசாமி கேக் வெட்டி அனைவருக்கும் இனிப்பு வழங்கினார்.

விழாவில், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ்,மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆறுமுகம், ராஜ்மோகன் செல்வின், மாநகர துணை அமைப்பாளர் கீதா முருகேசன், துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ், பகுதி செயலாளர்கள் ஜெயக்குமார் ராமகிருஷ்ணன், சுரேஷ்குமார், ரவீந்திரன், மாவட்ட மருத்துவ அணி தலைவர் அருண்குமார், முன்னாள் கஸ்தூரி தங்கம், மகேஸ்வர சிங், மண்டல தலைவர் கலைச்செல்வி திலகராஜ், கவுன்சிலர்கள் சரவணகுமார் ஜெயசீலி, பவானி, வைதேகி, வட்டச் செயலாளர் ரவீந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# முன்னாள் ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திருமகன் ஈவெராவின் 3ம் ஆண்டு நினைவு தினம்: ஈரோட்டில் காங்கிரஸ் கட்சியினர் அஞ்சலி



ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில், தந்தை பெரியார்தலைமைஅரசு மருத்துவமனை அருகில் உள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலை முன்பாக மலர்களால் அலங்கரிக்கப்பட்ட திருமகன் ஈ வெ ரா வி ன் திருவுருவப்படம் வைக்கப்பட்டிருந்தது.

முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்பு: ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் டி. திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி. சந்திரகுமார் மற்றும் மறைந்ததிருமகன்ஈவெராவின் மகள் செல்வி சமன்னா ஆகியோர் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் துணைத் தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா,மண்டலதலைவர்களான மாமரத்துபாளையம் எஸ்.கோபி, சூரம்பட்டி சாம்ராட் அசோக், ஆர். விஜய் பாஸ்கர், எச்.எம். ஜாபர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திரளாகப் பங்கேற்ற நிர்வாகிகள்:

இந்த நினைவேந்தல் நிகழ்வில்காங்கிரஸ்கட்சியின் பல்வேறு பிரிவு நிர்வாகிகள் மற்றும் முக்கியத் தலைவர்கள் அனைவரும் பங்கேற்று மரியாதை செய்தனர்.

முன்னாள் மாவட்ட தலைவர்கள்: ஈ.பி. ரவி, ஈ.ஆர். ராஜேந்திரன். திமுக பகுதி செயலாளர் அக்னி சந்துரு,திமுக கவுன்சிலர் திருநாவுக்கரசு, திமுக கிராமடை சந்திரன்,மாவட்டத் துணைத் தலைவர்கள்: சி. பாஸ்கர்ராஜ், பாபு (எ) வெங்கடாஜலம், மாவட்ட பொதுச் செயலாளர்கள், வி.கே. சச்சிதானந்தம், ஏ.சி.சாகுல் ஹமீது, இரா. கனகராஜன், எ. வின்சென்ட், மாநிலப் பொறுப்பாளர்கள்: எ. மாரியப்பன் (மாநில பொதுக்குழு உறுப்பினர்), எம். ஜவஹர் அலி (தமிழ்நாடு காங்கிரஸ் சிறுபான்மை துறை மாநில முதன்மை துணைத் தலைவர்), குளம் எம். ராஜேந்திரன் (TCTU மாநில துணைத்தலைவர்), சி.எம். ராஜேந்திரன் (வழக்கறிஞர் பிரிவு மாநில செயலாளர்),ஆரிப் அலி (மாநில பொதுச் செயலாளர், இளைஞர் காங்கிரஸ்),ம.முகமது அர்சத் (மாவட்ட ஊடகப் பிரிவு தலைவர்), சித்தோடு எஸ். பிரபு (மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர்), எஸ். சினேகா (மாவட்ட இளைஞர் காங்கிரஸ் துணைத் தலைவர்), பிரசன்னா (கிழக்கு சட்டமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர்), கே. விஜய் கண்ணா (ஈரோடு பாராளுமன்ற இளைஞர் காங்கிரஸ் முன்னாள் தலைவர்),இப்ராஹிம் (சிறுபான்மை துறை மாவட்ட தலைவர்) மற்றும் துணைத் தலைவர் கே.என். பாஷா, எம். ஞானதீபம்(மகிளாகாங்கிரஸ் மாநகர் மாவட்ட தலைவி), சி. மாரிமுத்து (மாவட்ட நெசவாளர் அணி தலைவர்), ஈ.ஆர். எஸ். பிரகாஷ் (மாவட்ட வழக்கறிஞர் பிரிவு தலைவர்), வழக்கறிஞர் வினோத் மாரியப்பா (மனித உரிமைகள் அமைப்பு தலைவர்), ஆர். கிருஷ்ணவேணி(ஈரோடு பாராளுமன்ற மகிளா காங்கிரஸ் ஒருங்கிணைப்பாளர்), முன்னாள் தலைவர்கள்: குப்பண்ணா சந்துரு(ஈரோடு நகர முன்னாள் தலைவர்), எம். செல்வராஜ் (முன்னாள் வட்டாரத் தலைவர்). நசியனூர் கவுன்சிலர் எம் ஆர் நட்ராஜ், மாது மற்றும் என். சி.சுப்பிரமணியம்.

மேலும் இந்த நிகழ்வில் நிர்வாகிகள் சிட்டி கல்கி, மாலிக் பாஷா, தினகரன், நவீன், கே.ஜே. டிட்டோ, பங்களா ஹசேன், பெரியார் நகர் சூரஜ், சூரம்பட்டி விஜயகுமார், டீக்கடை லோகு, கார்த்திக் ராம்கண், ராஜாஜிபுரம் சிவா, பி. குமரேசன், வாட்டர் சிவாஜி, திண்டல் ஏ.டி. ஜெகநாதன், கனி ராவுத்தர் குளம் சபீர் அகமது, பிரபு உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ்தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள்.

# திருப்போரூர் அருகே தண்டலம் ஊராட்சியில் வீடுகளை இடிக்க கூடாது என்றும் பட்டா வழங்க வேண்டியும் குறைதீக்கும் கூட்டத்தில் மனு



செங்கல்பட்டு மாவட்டம் திருப்போரூர் அடுத்த தண்டலம் ஊராட்சி பாரதி நகர் பகுதியில் 60 க்கும். மேற்பட்ட குடும்பத்தினர் வீடுகட்டி வசித்து வருகின்றனர்,

இதே சர்வே எண்ணில் உள்ள 15 குடும்பங்களுக்கு பட்டா வழங்கப்பட்ட நிலையில்,மீதமுள்ள 45 குடும்பத்தினர் பட்டா கேட்டு பலமுறை மனு அளித்துள்ளனர்,

இந்நிலையில் தனிநபர் குடும்பய்தகராறு காரணமாக நீதிமன்றத்தில் வழங்கு தொடர்ந்ததை தொடர்ந்து அப்பகுதியிலுள்ள 45 வீடுகளை இடிக்க வருவாய் ஆய்வாளர் நோட்டீஸ் வழங்கியதை இரத்து செய்ய வேண்டுமெனவும், ஒரே சர்வே எண்ணில் உள்ள இந்த 45 குடும்பங்களுக்கும் பட்டா வழங்கிட வேண்டியும் தண்டலம் பகுதியை சார்ந்த 100 க்கும் மேற்பட்டோர்மாவட்டஆட்சியரிடம்மனுஅளித்தனர்,

# மதுராந்தகம் அருகே தீ விபத்தில் குடிசை வீடு எரிந்து சேதம்

## சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் நலதிட்ட உதவிகள் வழங்கினார்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் ஒன்றியத்துக்கு உட்பட்ட காவாதூர் இருளர் குடியிருப்பு பகுதியில் உள்ள சுரேஷ் சித்ரா தம்பதியின் குடிசை வீடு இரண்டு தினங்களுக்குமுன்திடீரெனகுடிசையின்மேல்பகுதியில் தீப்பற்றி எரிந்து உள்ளது அக்கம் பக்கத்தினர் தீயை அணைத்தனர் குடிசைகளில் பாதி எரிந்த நிலையில் துணி உள்ளிட்ட பொருட்களும் எரிந்து சேதம் அடைந்த நிலையில் குடும்பத்தினர் தவிர்த்து வந்தனர் இந்த நிலையில் மதுராந்தகம் சட்டமன்ற உறுப்பினர் மரகதம் குமரவேல் நேரில் சென்று வேட்டி சேலை. அரிசி பணம் கொடுத்தனர் இதில் மதுராந்தகம் அதிமுக தெற்கு ஒன்றிய செயலாளர் கார்த்திகேயன் மதுராந்தகம் ஒன்றியகுழுஉறுப்பினர்சங்கர்மற்றும்கட்சிநிர்வாகிகள் கலந்து கொண்டனர்



ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் சாலை பாதுகாப்பு நிகழ்ச்சியை ஒட்டி சத்தி பேருந்து நிலையத்தில் கோபி வட்டாரப்போக்குவரத்து அலுவலர் ஷேக்முகமது தலைமையில் அரசு மற்றும் தனியார் பேருந்து ஓட்டுநர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கி, சாலை பாதுகாப்பு குறித்து உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். இந்த நிகழ்வில் மோட்டார் வாகன ஆய்வாளர் ரவிக்குமார், சத்தி எஸ்.ஐ வைர குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட வாக்காளர் பட்டியல் பார்வையாளர் ஏ.ஆர்.ராகுல் நாத், (இயக்குநர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை, சென்னை) மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர்/மாவட்ட தேர்தல் அலுவலர் ச.கந்தசாமி (04.01.2026) அன்று வாக்காளர் பட்டியல் சிறப்புதீவிரதிருத்தம் 2026 தொடர்பாக பவானி ஒன்றியம், ஊராட்சிக்கோட்டை, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், திருத்தம் குறித்து நடைபெற்ற சிறப்பு முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி "காபி வித்கலெக்டர்"நிகழ்ச்சியில், கலை பண்பாட்டு துறையின் கீழ் இயங்கும் முன்னாள் இசை பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் நாட்டுப்புற கலைஞர்களுடன் கலந்துரையாடினார்.

Printed by,Hiwins Printers,Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at ERODE, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.